# மன்றப் பொருள்

## பொருள் எண்.01

பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 30.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வேண்டடப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **பொது நிதி** | | | | |
| 1 | பழைய மோட்டர் புதுப்பித்து இயக்கவும் மற்றும் பசுமை உரக்குடில் உள்ள Shredder இயந்திரத்திற்க்கு மின் இணைப்பு கேபில் அமைக்கும் பணிக்கு | 3.20 | M/s.குரு இன்ஞ்சியரிங் -0.24 % குறைவு<br>M/s.மனோ எலெக்டிரிக்கல்ஸ் 0.25 % அதிகம் | M/s.குரு இன்ஞ்சியரிங் -0.24 % குறைவு |
| 2 | இந்நகராட்சியில் புதியதாக கட்டப்பட்ட அலுவலக கட்டிடத்தில் நாற்காலிகள் 100 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு | 0.75 | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 3 | வார்டு எண்.19ல் பொன்னியம்மன் கோயில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி அமைக்கும் பணிக்கு | 9.00 | திரு.A.சுந்தரம் -0.14 % குறைவு<br>திரு.V.குமார் 2.02 % அதிகம் | திரு.A.சுந்தரம் -0.14 % குறைவு |
| **குடிநீர் நிதி** | | | | |
| 4 | ராமசாமி குளம் கழிவுநீர் ஊந்து நிலையதில் உள்ள 25KVA DG set பழுது நீக்கம் செய்யும் பணிக்கு | 3.10 | M/s.குரு இன்ஞ்சியரிங் -0.47 % குறைவு<br>M/s.மனோ எலெக்டிரிக்கல்ஸ் 0.12 % அதிகம் | M/s.குரு இன்ஞ்சியரிங் -0.47 % குறைவு |
| 5 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறுமின்விசை நீர் தோக்க தொட்டிகளில் 65 எண்களுக்க தானியங்கி சுவிட்சுகன் பொருத்து பணிக்கு | 9.00 | M/s.SRS Niagara Poert Saver -0.38 % குறைவு<br>M/s.Prakash Electrical & Electronics - 0.19 % அதிகம் | M/s.SRS Niagara Poert Saver -0.38 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதி மற்றும் குடிநீரி நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 1652/2017/இ1**

# மன்றப் பொருள்

## பொருள் எண்.01

பல்லவபுரம் பெருநகராட்சி 18.01 சதுர கிலோ மீட்டர் கொண்டு 42 வார்டுகளை கொண்டது ஆகும். 2011ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 215452 ஆகும். நகராட்சிக்கு தேவையான குடிநீர் மொத்த அளவு 29.09 MLD ஆகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினசரி 55 இலட்சம் லிட்டரும் CMWSSB மூலம் 25 இலட்சம் லிட்டரும், பெறப்பட்டு உள்ளூர் குடிநீர் ஆதாரம் மூலம் சராசரியாக 30 இலட்சம் பெறப்பட்டு நகராட்சி பகுதிகளுக்கு நபர் ஒருவருக்கு 43 LPCD அளவில் 4 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கோடைகாலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு சீராக குடிநீர் வழங்க இயலாமல், 6 அல்லது 7 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கும் நிலை ஏற்படுகிறது. மேலும் தற்போது CMWSSB மூலம் 99.95/- கோடியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முழுவதும் மார்ச் 2019ல் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குரிய குடிநீர் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னைக்கு வரும் குடிநீர் குழாயில் இணைப்பு வழங்கி அதன் மூலம் பல்லாவரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது கோடைகாலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் பாலாறு மற்றும் செம்பரக்கம்பாக்கம் ஏரியில் நீர் இருப்பு குறைவாகவும், மற்றும் பாலாற்றில் நீர் மட்டம் குறைவாக உள்ளதால், கோடைகாலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படவாய்ப்புள்ளது.

இது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் 22.12.2018ன் தேதி நகராட்சி பகுதியிலுள்ள கச்சேரி மலை குட்டை, திருநீர்மலை குவாரி பகுதிகளில் ஆய்வு செய்து மேற்படி கல்குவாரிகளில் தேங்கியுள்ள மற்றும் பெறப்படும் ஊற்று நீரை சுத்திகரிப்பு செய்து குடிநீர் உபயோகத்திற்க்கு பயன்படுத்தலாம். என அறிவுரை வழங்கியுள்ளார்கள். கல்குவாரிகளிருந்து கிடைக்கப்படும் தண்ணீர் நகராட்சி பகுதியில்

குடிநீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாக தீர்க்கும் வகையில் அமையும், எனவே குடிநீர் ஆதாரத்தை பெருக்கும் வகையில் கச்சேரி மலை குட்டை, திருநீர்மலை கல்குவாரி குட்டை, திருசூலம் கல்குவாரி குட்டை, கீழ்க்கட்டளை ஏரி மற்றும் பெரிய ஏரி ஆகிய இடங்களில் ஆய்வு பணிகளை TWIC நிறுவனம் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆய்வு அறிக்கைக்குரிய செலவீன தொகையை PPF நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 7872/2018/இ1**

## பொருள் எண்.02

பல்லவபுரம் நகராட்சி பகுதியில் தினசரி நாள் ஒன்றுக்கு 104 மெட்ரிக் டன் அளவில் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வேங்கடமங்கலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்பட்டு வந்தது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் குப்பைகளை உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து உரமாக்கும் வகையில் 7 இடங்களில் பசுமை உரக்குடில்களும், 23 இடங்களில் சிறிய அளவிலான நுண் உரக்குடில்களும் அமைக்கப்பட்டு மக்கும் தன்மையுள்ள உயிரி கழிவுகளை உரமாக்கும் பணி செயல் படுத்தப்பட்டு வருகிறது.

மக்கும் தன்மையுள்ள 50% உயிரி கழிவுகளை தவிர்த்து, 6% மக்காத குப்பைகளான மறுசுழற்சிக்குகந்த கழிவுகளை வாரந்தோறும் விற்பனை செய்து பணியாளர்களுக்கு ஊக்க தொகை வழங்கப்படுகிறது. மீதமுள்ள மறுசுழற்சிக்கு அனுப்ப முடியாத எரியூட்ட தகுந்த 35% கழிவுகளை (Combustible Waste) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. அந்நிறுவனத்தில் அனைத்து நகராட்சிகளாலும் அனுப்பப்பட்ட கழிவுகள் தேக்கம் ஏற்பட்ட காரணத்தால் இக்கழிவுகளை அந்நிறுவனத்தில் ஒப்படைக்க இயலாமல் தினசரி சேகரிக்கப்படும் எரியூட்ட தகுந்த கழிவுகள் நகராட்சி பகுதிகளில் ஆங்காங்கே தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் மேற்படி எரியூட்ட தகுந்த (Combustible Waste) கழிவுகளை இறுதியாக்கம் செய்ய, வேங்கடமங்கலம் பகுதியில் நகராட்சிக்குரிய காலி இடத்தில் Pyrolysis Technology முறையில் திட்டம் செயலாக்கம் செய்யும் வகையில் ரூ. 2.30/- கோடிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–05 அவர்களுக்கு நிர்வாக அனுமதிக்காக பிரேரணை அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
3. CRS நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண். 7596/2018/இ1</u>**